உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 29 | சாதாரண - ஆடி - 10—8—70 | இதழ் [illegible]9

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே, — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## திருநெறிய தமிழோசை

“தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்” என்று கனவு கண்டார், அண்மையில் வாழ்ந்து மறைந்து, இன்று ‘அமரகவி’ எனப் போற்றப் பெறுகின்ற பாரதியார். தமது கனவைப் பாரதியார் பாட்டாகப் பாடினர். ஆனல் அவரைப்போல அதே கனவை அவருடன் சேர்ந்து கண்டோர் வ. உ. சிதம்பரனர் போன்ற எத்தனையோ பேர். அவர்கள் கண்ட கனவு ஒன்றல்ல; பல. என்ருலும் அவற்றுள் முதன்மையானவை இரண்டு. ஒன்று ‘ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்று ஆட வேண்டும்; பள்ளுப் பாட வேண்டும்’ என்பது. மற்ருென்று, ‘தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல்

வேண்டும்' என்பது. "ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்று ஆடுவோமே! பள்ளுப் பாடுவோமே" என்ற பாடலைச் சிறிது மாற்றி, 'ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று ஆடுவோமோ! பள்ளுப் பாடுவோமோ' என்று சொல்லிப் பார்த்தால், அவர்கள் கண்ட கனவின் உண்மை விளங்கும்.

பாரதியாரும், பிறருங்கண்ட கனவுகள் புதிய ஒன்றைப் பெறுவதற்காக அல்ல. பழமையாக இருந்து இடையிலே இழந்துவிட்டவைகளை மீண்டும் பெறுவதற்காகத்தான். பழம் பெருஞ் சிறப்பினை உடைய பாரத நாடு பழங்காலத்தில் பிறருக்கு அடிமைப்பட்டிருக்கவில்லை. தன்னுரிமை உடையதாகவே விளங்கியது. ஆயினும் அவ்வுரிமையை இடையிலே இழந்தமையால், அதனை மீண்டும் பெற்றுவிட்டதாகவும், பெற்று ஆடிப் பாடிக் களிப்பதாகவும் நாட்டுப்பற்று மிக்கோர் கனவு கண்டு ஏங்கினர்கள்.

தமிழோசையும் அப்படிப்பட்டதுதான். ஒருகாலத்தில் உலகமெங்கும் தேமதுரத் தமிழோசை பரவி இருந்தமை பல சான்றுகளால் அறியப்படுகின்றது. உலக நாடுகள் பலவற்றில் தமிழர்கள் சென்று வாழ்ந்து தங்கள் மொழி, கலை, பண்பாடு, சமயம் முதலிய அனைத்தையும் பரப்பினமை பல வரலாற்றுக் குறிப்புக்களால் நன்கு வலியுறுகின்றது. இவற்றையெல்லாம் உணர்ந்தே பாரதியார் தமிழ் மொழியை, "வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும் வண்மொழி வாழியவே" என்று பாடினர்.

பாரதியார் என்ன? இற்றைக்குப் பல நூற்றுண்டுகட்கு முன்பே சேக்கிழார், "ஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்" என்று பாடினர். இவையெல்லாம் வெறும் புனைந்துரைகள் அல்ல; முழு உண்மைகளே. என்ருலும் அவை இன்று புனைந்துரை போலவும், சில பழங்கதைகள் போலவும் காணப்படுகின்றன. இதற்குக் காரணம், தமிழ் மக்களது கள்ளம் கபடற்ற உள்ளத்திருலோ அல்லது அளவு கடந்த தந்நம்பிக்கை காரணமாகக் கவலையற்று உறங்கிய உறக்கத்திருலோ பிறமொழி புகுந்து ஆட்சி செய்யத் தொடங்கியதே. அதனல், தமிழ் முன்னை நிலையை அடைய வேண்டுமெனப் பலர் கனவு காணவேண்டியதாயிற்று.

அவர்கள் கண்ட இருகனவுகளில் ஒன்று நனவாகி விட்டது. அஃது இந்தியநாடு விடுதலை பெற்றுத் தன்னுரிமையுடன் விளங்குவது. இனி மற்றொரு கனவாகிய 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவவேண்டும்' என்ற கனவும் நனவாவதற்குரிய அறிகுறிகள் பல காணப்படுகின்றன. உலக நாடுகள் பலவற்றில் உள்ள அறிஞர் பலர் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு ஆவன செய்ய முற்பட்டுப் பன்னாட்டுத் தமிழ்க் கழகம் நிறுவி அதன் வழியாக உலகத் தமிழ்மாநாட்டினை அவ்வப்பொழுது மிகச் சிறந்த வகையில் ஆங்காங்கு நடத்தி வருகின்றனர். இரண்டு மாநாடுகள் நடைபெற்ற பின்பு மூன்றாவது மாநாடு அண்மையில் பிரஞ்சு நாட்டில் பாரிசு நகரத்தில் நடைபெற்றமை உலகமறிந்தது. நான்காவது உலகத் தமிழ்மாநாடு 1973 ஆம் ஆண்டில் இலங்கையில் நடைபெறப் போவதாகச் சொல்லப்படுகின்றது. இவையெல்லாம் தமிழ் உலகெங்கும் பரவுதற்குரிய நல்ல பல வாய்ப்புக்களைத் தருவனவாகும்.

தமிழ்ப் பற்றுடையோர் கண்ட கனவின்படி தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் அதே சமயத்தில் சைவப் பற்றுடைய அன்பர்கள் காண்கின்ற கனவு ஒன்று உண்டு; அது, 'திருநெறிய தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்பதே. இதுவும் புதியதன்று; பழமையானதே.

'திருநெறிய தமிழ்' என்பவை பன்னிரு திருமுறைகள். அவைகளில் முன் நிற்பவை தேவாரத் திருப்பதிகங்கள். 'திருநெறிய தமிழ்' என்ற பெயரும் தேவாரத்தின் முதல் திருப்பதிகத்தில்தான் திருஞானசம்பந்தர் திருவாக்கில் எழுந்தது. 'திருநெறி' என்பதைத் திருமூலரே குறித்துள்ளார். எனினும், 'திருநெறிய தமிழ்' என்று அருளிச்செய்தவர் திருஞானசம்பந்தர்.

'திருஞானசம்பந்தர் காலத்தில் வேதமே எங்கும் பரவி இருந்தது' என்பதை,

" பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும் பயின்றோதும்
ஓசை கேட்டு
வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள் பொருட் சொல்லும்
மிழலை யாமே "

என அவரே அருளிச்செய்திருத்தலால் அறியலாம்.

திருஞானசம்பந்தரது காலம் முதலாகத் திருநெறிய தமிழாகிய தேவாரத் திருப்பதிகங்களின் ஓசையே எங்கும் பரவி, மக்கள் உள்ளங்களை உருகச் செய்தது என்பதைச் சேக்கிழார் விளக்கும் முறை இது:

உள்ளம் ஆர்உரு காதவர்! ஊர்விடை
வள்ள லார்திரு வாரூர் மருங்கெலாம்
தெள்ளும் ஓசைத் திருப்பதி கங்கள் பைங்
கிள்ளை பாடுவ; கேட்பன பூவைகள்.

சுந்தரர் 'திருஞானசம்பந்தர் நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பினர்' என்கின்றார். இதனைச் சிவஞானமுனிவர் தமது காஞ்சிப்புராணத்துள் திருஞானசம்பந்தரைத் துதிக்கும் பாடலில், தேயமெல்லாம் - குரவையிடத் தமிழ்வேதம் விரித்தருளும் கவுணியர்தம் குலதீபத்தை" என்று விளக்கினர்.

'குரவை' என்பது பெண்கள் விளையாடும்பொழுது பலர் ஒன்றாகக் கைகோத்து வளைந்துநின்று ஆடும் ஒருவகைக் கூத்து. இது, 'குரவைக் கூத்து' என்று சொல்லப்படும். இக்கூத்து ஆடும்பொழுது பாடும் பாட்டே 'குரவைப்பாட்டு' எனப்படும். 'சமயாசாரியர்கள் காலத்தில் நமது நாட்டில் குரவையாடும் பெண்கள்கூடத் தேவாரங்களையே பாடி ஆடினர்கள்' என்கின்றார் சிவஞான முனிவர். அவ்வாறாயின், இளஞ்சிறுவர்களும், சிறுமியர்களும்கூடப் போகும்பொழுதும், வரும்பொழுதும், விளையாடும்பொழுதும் பாடியது தேவார திருவாசகங்களையே என்று தெரிகின்றது. இன்று நம் சிறுவர் சிறுமியர்கள் போகும்பொழுதும், வரும்பொழுதும், ஆடும்பொழுதும் என்ன பாடலைப் பாடுகின்றார்கள் என்பதைச் சொல்லத்தேவையில்லை. ஒரு காலத்தில் வீடுகளிலும், வீதியிலும், மூலை முடுக்குகளிலும் திருநெறிய தமிழோசையே

கேட்டிருந்த நாட்டில், இன்று எங்கும் என்ன ஓசை கேட்கின்றது ? இந்நிலை நீங்கி முன்நிலை வர வேண்டாவோ! அதனால்தான் 'திருநெறிய தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்ற கனவைச் சைவப் பெருமக்கள் காண வேண்டியுள்ளது.

தருமையாதீன முதற்குரவர் ஸ்ரீ குருஞானசம்பந்தர், 'ஆசையறுப் பாசம் விடாய்' என்று எடுத்துக்கொண்டு, "திருமுறைகள் ஓதாய் மனமே உனக்கென்ன வாய்" என்று அருளிச்செய்தவண்ணம் திருநெறிய தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தற்பொருட்டு இவ்வாதீனத்தில் இன்று அருளாட்சி செலுத்திவரும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் திருமுறைகளை விளக்கக் குறிப்புக்களுடன் பலருக்கும் கிடைக்கும் வகையில் சிறந்த பதிப்புக்களாக வெளிவரவும், திருநெறிய தெய்வத் தமிழ்மன்றம் நிறுவித் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடுகள் பல அவ்வப்பொழுது நடைபெறவும் திருவுளம்பாலித்து வருகின்றார்கள். அவற்றின் வழியாகத் தேமதுரத் தமிழோசையோடு திருநெறிய தமிழோசை உலகமெங்கும் பரவிப் பயன்தரத் திருவருள் முன்னிற்க வேண்டுவோம்.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam Sirkahzi.

"I had a surprise occasion to worship this temple with my family. Somehow or other knowing me the temple Superintendent had taken me around the temple to worship the deity. The temple Supdt. explained to me about the temple administration and maintenance. The temple is neatly maintained. I am much impressed to note about the cleanliness of the temple and arrangements."

(Sd.) ... ... ... ...

7—7—'70. District Munsif, Mayuram.

குருபாதம்

குருவருள்

# தோத்திரமும் சாத்திரமும்

## ஆள் அல்லேன் எனலாமே?

சிறப்புடைப் பொருள்கள் பலவற்றிலும் அறிவே சிறந்தது. "அறிவுடையார் எல்லாம் உடையர்; — அறிவிலார் என்னுடைய ரேனும் இலர்" என்கின்றார் திருவள்ளுவர். எனினும் 'அறிவு எனபது எது' என்பதற்கு விடை காண்பது அரிதாகினறது. திருவள்ளுவர் இவ்வினவிற்குப் பல வகையாக விடை கூறியுள்ளார்.

"சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு"

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

இங்ஙனம் பலவகையாக அவர் கூறியிருத்தலைக் காண்கின்றோம். எனினும் இவை எல்லாவற்றிற்கும் திறவாக அவர் ஒன்று கூறுகின்றார்.

"அறிவுடையார் ஆவ தறிவார்; அறிவிலார்
அஃதறி கல்லா தவர்"

என்பதே அது. அஃதாவது, 'பின்னர் விளையக் கூடியதை முனனரே உள்ளவாறு அறிவதே அறிவு' என்பதாம். இது, பொருள்களின் தனமையை உள்ளவாறு உணர்த்தலாலே உணடாவதாகும் ஏனெனில், தீமை தருவதை நன்மை தருவதாக நினைந்து பற்றினும், நன்மை தருவதைத் தீமை தருவதாக நினைந்து விடுப்பினும் பின் நிகழ்ச்சி முன் கருதியதற்கு முரணுகுமாதலால் அஃது அறிவு எனப்படாது.

அறிவுக்கு எதிரானது அறியாமை. இதுவே 'பேதைமை' எனப்படும். 'புல்லறிவு' எனப்படும் சிற்றறிவும் அறியாமையே.

" பேதைமை என்பதொன்று யாதெனின் ஏதங்கொண்டு
ஊதியம் போக விடல் "

" நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை "

என்பனபோலத் திருவள்ளுவர் அறியாமை பற்றிக் கூறுவன யாவும், பொருள்களின் தன்மையை உள்ளவாறு உணராது, மாறுபட உணர்தலாகவே இருத்தல் அறியத்தக்கது. இதனை, "பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும் மருள்" என ஓரிடத்தில் அவர் வெளிப்படையாகவே கூறியுள்ளார். எனவே, பொருள்களின் தன்மையை உள்ளவாறு உணர்வதே அறிவைப் பெறுதலாகும்.

பொருள்களின் தன்மையை உள்ளவாறு உணர வேண்டின், ஆன்றோரது அனுபவ மொழிகளை அடிப்படையாகக் கொண்டு, நமது அறிவிற்கும், அனுபவத்திற்கும் பொருந்த ஆராய்ந்து உணர்தல் வேண்டும். இவ்வாறு ஆராயுமிடத்து முதலில் ஒவ்வொருவரும் தம்மைப்பற்றி ஆராய்ந்துகொண்டு பின்பே பிறவற்றை ஆராய்தல் வேண்டும். தம்மைப்பற்றி ஆராய்தலே 'ஆன்ம விசாரணை' அல்லது 'ஆன்ம சோதனை' என்று சொல்லப்படும். 'விசாரணை, சோதனை' 'ஆராய்ச்சி' என்பன எல்லாம் ஒன்றே. 'ஆன்மா' என்பது, 'தான்' என்னும் பொருளைத் தரும்.

" தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்ற மாகும் இறைக்கு "

" ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னு முயிர்க்கு "

என்றாற்போல்வன, ஒவ்வொருவரும் முன்னே தம்மை ஆராய்தல் வேண்டும் என்பதையே குறிக்கும்.

தம்மையே அறியாதவர்கள் பிற பொருளை எவ்வாறு அறிதல் கூடும்? அதனால் முதலில் தம்முடைய தன்மையை நன்கு அறிந்து கொண்டால், அதனாலே பிற பொருள்களின் தன்மையும் உணரத்தக்கனவாகும் என்பதை மெய்கண்டார்,

" தம்மை உணர்ந்து தமைஉடைய தன்னுணர்வார்
எம்மை உடைமை எமை இகழார் — தம்மை
உணரார் உணரார்; உடங்கியைந்து தம்மில்
புணராமை கேளாம் புறன் "

என்று விளக்கினர். ஸ்ரீகுருஞானசம்பந்தரும் தமது சிவபோக சாரத்தில்,

" தன்னை அறியார்; தலைவன் தனை அறியார்;
முன்னை வினையின் முடிவறியார் — பின்னைக்
குருக்களென்று பேரிட்டுக் கொள்ளுவர்கள் ஐயோ!
தெருக்கள் தனிலே சிலர் "

என்று அருளிச்செய்தார். ஆகவே, ஒவ்வொருவரும் முன்னே தம்முடைய தன்மையை ஆராய்ந்து அறிதல் இன்றியமையாதது.

அறிவுடையோர் பலரும் தம்முடைய தன்மையை உண்மையாக ஆராய்ந்து பார்ப்பார்களாயின் தமக்கு உள்ள குறைபாடுகள் நன்கு விளங்குவனவாகும். ஒவ்வொருவருக்கும், 'நாம் எல்லாம் அறிவோம், எல்லாம் செய்ய வல்லோம்' என்ற எண்ணம் இயல்பாக அமைகின்றது. ஆனல், 'அடுத்த கணத்தில் - அல்ல, இப்பொழுதே இவ்விடத்தில் இல்லாமல் வேறு இடத்தில் என்ன நிகழ்கின்றது? வேறு இடம் - அல்ல, இவ்விடத்தே நம்முடன் இருப்பவர் தம் உள்ளத்தில் என்ன நினைக்கின்ருர்? நம்முடன் இருப்பவர் - அல்ல, நாமே நினைக்கின்ற நினைப்புத்தானும் சரியான நினைப்புத்தானு?' என்பவை போன்றவைகளே ஒருவராலும் அறிய முடிவதில்லை. இனிப் பிறருக்கல்ல, நம்மைச் சேர்ந்தவர்களுக்கோ அல்லது நமக்கோ வருகின்ற துன்பங்களை நம்மால் நீக்கமுடிவதில்லை. உண்மை இவ்வாறு இருக்கும்பொழுது, "நாம் எல்லாம் அறிவோம், எல்லாம் செய்யவல்லோம்" என்று எண்ணுதல் எத்துணைத் தவருன எண்ணமாகின்றது! ஆகவே, ஒன்றை அறிவதும், செய்வதும் உலகில் ஒருவருடைய இச்சையிலும் இல்லை. அனைத்திற்கும் மேற்பட்ட ஒருபெரும் பொருளின் இச்சை வழியேதான் யாவும் நடைபெறுகின்றன என்பதைத் தாயுமானவர் மிக அழகாகப் பின்வருமாறு விளக்குவார்.

ஆராயும் வேளையிற் பிரமாதி யானாலும்
ஐயஒரு செயலுமில்லை ;
அமைதியொடு பேசாத பெருமைபெறு குணசந்த்ர
ராமென் இருந்தபேரும்
நேராக ஒருகோபம் ஒருவேளை வர அந்த
நிறைவொன்றும் இல்லாமலே
நெட்டுயிர்த் துத்தட் டழிந்துளறுவார் ; வசன
நிர்வாகர் என்றபேரும்
பூராய மாஒன்று பேசுமிடம் ஒன்றைப்
புலம்புவார் ; சிவராத்திரிப்
போது துயிலோம் என்ற விரதியரும் அறிதுயில்
போல இருந்து துயில்வார் ;
பாராதி தனில்உள்ள செயலெலாம் முடிவிலே
பார்க்கில்நின் செயலல்லவோ !
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணனந்தமே.

ஒருவரை, 'இவர் அடக்கம் மிக்கவர், சாந்த மூர்த்தி, பொறுமையே வடிவானவர்' என்றெல்லாம் பலரும் போற்றுகின்றனர் ; உண்மையில் அவர் அப்போற்றுதலுக்கு உரியவரே. ஆயினும், அவருக்கும் ஒருசமையம் பெரியதொரு சினம் மூள்கின்றது ; தம்மையே மறந்துவிடுகின்றார் ; கடுகடுத்த முகத்துடன் கண் சிவந்து பெருமூச்செறிந்து என்ன சொல்கின்றோம் என்று அறியாமல் எவ்வெவ் வார்த்தைகளையோ சொல்லுகின்றார். இனி, 'சிறந்த பேச்சாளர்' என்று பெயர்பெற்ற ஒருவர் எக்காரணத்தாலோ ஒரு சிறந்த முதன்மையான கூட்டத்தில் ஒன்று கிடக்க ஒன்றை உளறுகின்றார். 'கேட்பவர்கள், இவர் என்ன பேசுகின்றார் என்று' நினைக்கின்றார்கள். இனி மற்றொன்று. சிவராத்திரியில் சிறிதும் உறக்கமே கொள்ளலாகாது' என்று சிவ வழிபாட்டிலும் பாராயணத்திலும் கருத்தூன்றியிருக்கின்றார் ஒருவர். அவரும் ஒருசமயம் தம்மை அறியாமல் தாம் விழித்திருப்பதாகவே நினைத்துக்கொண்டு சிறிது உறக்கத்தில் ஆழ்ந்து விடுகின்றார். இவையெல்லாம் உலகத்தில் கண்கூடாக நிகழ்கின்ற நிகழ்ச்சிகள்தாமே ? அவ்வாறு இருக்கும்பொழுது எந்த ஒருசெயலை, 'நான் செவ்வையாகச் செய்து முடிப்பேன்' என்று ஒருவன் சொல்ல இயலும் ? இயலாது. ஆகவே, "என் செயலாவது யாதொன்றும் இல்லை ; இனித் தெய்வமே – உன்செயலே

என்று உணரப்பெற்றேன்" என்று இருப்பதுதான் அறிவுடைமையாகின்றது. இவ்வாறு இருப்பதுதான் தம்மை உணர்ந்து தலைவனையும் உணர்தலாகும்.

அறிவிலும், செயலிலும் தன் இச்சைவழி நடக்க இயலாத பசுக்களாகிய ஆன்மாக்கள், எல்லாவற்றையும் தானே அறியவும், தன் இச்சைவழி நடத்தவும் வல்லவனாகிய இறைவனுக்கு அனாதியே அடிமையாயுள்ளதுதான். பின்னும் என்றும் அடிமைப்படுவதுதான். அவ்வாறு இருக்க அத்தன்மையை யாரேனும் ஒருவர் அறிவிப்பாராயின் 'நான் அத்தன்மையன் அல்லேன்' என்று சொல்லுதல் கூடுமோ? கூடாது. ஆயினும் உயிர்கள், 'நாம் இறைவனுக்கு அடிமையல்லோம்; நம் இச்சைவழியேதான் இருக்கின்றோம்' என்று எண்ணுகின்றன. இது தவறு என்பதையே சுந்தரரது வரலாற்றினாலும், அவரது வாக்கினாலும் இறைவன் உலகிற்கு உணர்த்தியருளினான்.

திருநாவலூரில் அவதரித்து, 'நம்பியாரூரர்' எனப்பெயர் தாங்கி வளர்ந்த சுந்தரர் பண்டு திருக்கயிலையில், 'என்னை உலகர்வழிச் செல்லாது தடுத்து ஆட்கொள்ளவேண்டும்' என்று வேண்டிக்கொண்ட வண்ணம் அவர் திருமணம் கொள்ளுபபொழுது இறைவன் மணப்பந்தலில் கிழவேதியனாக வந்து மணவினை தொடங்குதற்குமுன்னே, 'எனக்கும் உனக்கும் உள்ள ஒரு வழக்கினை முடித்தபின்பே நீ உன் மணவினையை முடித்தல் வேண்டும்' என்று சொல்ல, நம்பியாரூர், 'இந்த வேளையில் வழக்குப் பேசவந்த உமது வழக்கு யாது' என்று கேட்க, அவையில் உள்ள அனைவரையும் நோக்கி, 'இந்நாவலூரன் எனக்கு அடிமை; இதனை இவன் உடன்படுதல் வேண்டும்; இல்லையேல் நீங்கள் உடன்படச்செய்தல் வேண்டும்' என்றான். நம்பியாரூரர் சினங்கொண்டு 'அந்தணர் அடிமை செய்தல் என்பதை இவர் தாம் சொல்லக் கேட்கின்றோம்; இவருக்குப் பித்துப் பிடித்திருக்குமோ' என்று சொல்லிச் சிரித்தார். கிழவராக வந்த இறைவன், 'ஏடா சிரிக்க வேண்டா; உன் பாட்டன் எழுதிக்கொடுத்த அடிமை ஓலை இதோ இருக்கின்றது' என்று சொல்ல, நாவலூரர், 'அடிமையோலையா, காட்டும் பார்க்கலாம்' என்று நெருங்கக் கிழவர் ஓடத்தொடங்கினர். இருவரும் ஓட, ஆரூரர் ஓரிடத்தில் அவ்வோலையைப் பற்றிக் கிழித்தெறிந்தார்.

கிழவனர், 'முறையோ! முறையோ!' என்று முறையிட்டுத் திருவெண்ணெய்நல்லூர் மன்றத்தில் சென்று வழக்காடி வென்றார். தோற்ற நம்பியாரூரர் தம் அடிமை நிலையை உணர்ந்து தம்மைப் பணிகொள்ள வந்த தலைவனை அறிய முயலும்பொழுது, இறைவன் அவருக்குத் தனது உண்மைக் காட்சியை வழங்கியருள, நாவலூரர் அன்பு கரைகடந்து பெருகத் தாய்ப்பசுவைப் பிரிந்த கன்றுபோல் அழுது, 'இனி யான் செய்யும் பணியாது' என, 'நமக்குப் பாட்டே அர்ச்சனை; அதனல் நம்மைப் பாடுக' என, 'எப்படிப் பாடுவேன்' என்ற பொழுது, 'நீ நம்மைப் பித்தன் என்று கூறிய அதனையே கொண்டு பாடுக' என நாவலூரர், பித்தா பிறைசூடி எனத் தொடங்கி, 'என்னை வலிய ஆட்கொள்ளவந்த வள்ளலே, உனக்கு நான் முன்பே ஆளாய் இருக்க, அதனை நீ நினை வூட்டியபொழுதும் ஆளல்லேன் – அடிமையல்லேன் என்று மறுத்து வாதிட்டது தகுமோ' என்று பலபடியாகப் பாடித் துதித்தார். இறைவன், மேலும் பாடும் பணியையே அவருக்கு அளித்து மறைந்தருளினன்.

இவற்ருல் உயிர்கள் இறைவனுக்கு 'அன்றும் இன்றும் என்றும் அடிமையே; அவன் ஆண்டவனே' என்பது விளங்கும். இவ்வுண்மையை மெய்கண்டார் தமது சிவஞான போதத்துள்,

> " இனிச் சங்காரமே முதல் என்றது,
> சுட்டுணர்வுடைய பிரபஞ்சம், சுட்டுணர் வில்லாத
> சங்காரத்தின் வழியல்லது
> சுதந்திர மின்றி நிற்றலான் "

> " ஒன்றலா ஒன்ருல் உளதாகி நின்றவா
> ரென்றலா ஒன்றில்அவை ஈருதல் — ஒன்றலா
> ஈறே முதல்; அதனின் ஈறலா ஒன்றுபல
> வாறே தொழும்பாடும் அங்கு "

என்று விளக்கினர்.

இத்தொழும்பாகும் நிலையையே திருவள்ளுவர், "சிறப் பென்னும் செம்பொருள் காண்பது" எனவும், "சார்புணர்ந்து சார்பு கெடஒழுகல்" எனவும் கூறினர். இத்தகைய சாத்திர விளக்கங்களால் தோத்திரத் திருப்பாடல்களின் உண்மைப் பொருளை உணர்ந்துகொள்ளுதல் பெரும்பயன் தருவதாகும்.

# மெய்கண்டார்

செஞ்சொற்கொண்டல், புலவர்,

**திரு. சொ. சிங்காரவேலன் M. A., Dip.Ling.**

( மலர் 29, இதழ் 8, பக்கம் 433 இன் தொடர்ச்சி )

கடந்தோர்க்கும் வழிபாடு வேண்டு மிங்கே ;
கையெடுத்துப் பரவுதலும் வேண்டும் ; அன்பே
இடந்தோறும் அடியார்கள் கூட்டம் கூடி
இணைந்திடிலே என்றிறுதி நூற்பாக்கூறி,
மடந்தவிர்ந்தே அறிவுநலம் பூக்க நல்ல
மாணெறிகள் காட்டியவன் திருநூல் கூறும்
இடந்தோறும் நெஞ்சாழ வேண்டு மன்றோ ?
எனிலன்றோ சைவரெனல் உண்மை ஆகும் ! (18)

பொய்கண்டார் பலர்வாழும் உலக மீதில்,
புறங்கண்டார் அஞ்ஞான இருட்டை அன்றே !
மெய்கண்டார் தத்துவத்தின் வழியே ஓங்கும்
மெய்கண்டார் ; அருளுருவாம் மெய்யே கொண்டார் ;
வையகத்தில் ஆணவத்தின் வடிவம் என்ன
வழங்குகஎன் றுரைத்துவந்த அருணந்திக்குக்
கைவிரலால் சுட்டியவர் ஐயம்போக்கக்
கால்வீழ்ந்தே கண்ணீரால் கழுவ லானார். (19)

பல்லக்கில் ஏறிவந்த அருணந்திக்குப்
பல்லக்குத் தேவையில்லை ; பரிவாரங்கள்
சொல்லடுக்கத் தலைநிமிர்ந்து பட்டாடைகள்
சுமந்துவந்த அருணந்தி தலைகவிழ்ந்தார்.
பல்லாண்டு பனுவல்பல கற்று ணர்ந்து
பண்டிதராய்த் தருக்கிநின்ற பான்மை ஓடி,
எல்லாண்ட பெருந்தகையாம் மெய்கண்டாரின்
இளம்பாதப் போதுகளில் உளந்தாழ்ந்தாரே. (20)

முதியபெரும் புலவரிவர் சீடர் ஆனார்,
 முதறிஞர் சிவஞான போதத்திற்குட்
பொதிபொருளைச் சிவஞான சித்தியாராய்ப்
 பொருந்தவுரை விரித்தழகுப் பனுவல் செய்தார்.
மதியழகின் அனுபவமே பின்னல் வந்த
 மறைஞான சம்பந்தர் வழியே, தில்லை
வதிந்திருந்த உமாபதியார் மருங்கு சார,
 வழிவழியாம் மரபுநிலை வளர்ந்த தன்றே. (21)

பதினன்கு சாத்திரமாம் பனுவல் இங்கே
 பரவுகின்ற சித்தாந்த நெறி விளக்கும்;
விதிமுறையின் தோத்திரங்கள் வளர்ந்த பின்னே
 வெண்ணெய் நல்லூர் மெய்கண்டான் தந்த உண்மை
பதிபசுபா சம்என்னும் பொருளை இந்தப்
 பாரறிய விளக்குகின்ற மெய்ம்மை கண்டு
அதிசயித்தார் பிறரெல்லாம்; தமிழைக்கற்ற
 ஆங்கிலரோ விழிதிறந்தே தேவர் ஆனர்! (22)

போப்புரைத்தான் திராவிடத்தின் புதிய பேறு
 பொலிவுடைய சித்தாந்த சைவம் என்றே!
காப்புரைத்தான் தமிழனல்லன்; கடல்கடந்தே
 கருதுகின்ற புறச்சமயப் பாதை நின்றேன்!
கூப்புரைத்தான் மனங்கொண்டே, சுருக்க மாகக்
 கூறிநின்ற சிவஞான போதமென்ற
காப்புரைத்தான் திருவடிகள் 'வாழ்க' என்றே
 கருதிடுவீர் கைக்கொள்வீர், வாழி என்பேன்? (23)

வடமொழியின் வேதத்தே நடுவணுள்ள
 வாய்மொழியே மெய்கண்டான் மலர்வாய் வந்த
திடமுடைய சிவஞான போதம் என்றே
 தெளியாதார் கூறுமுரை செவிக்கொள் ளாதீர்!
நடமாடும் பெருமான்சீர் உளத்தே நின்று
 நடமாட, முதனூலாய், தமிழில் வாய்மைக்
கடமாரும் தமிழ்வேழம் தந்தவேதம்
 கையெடுப்பீர்! வாழிஇந்த முதனூ லென்பீர்! (24)

ஆரியத்தின் மீதெனக்குக் காய்ச்சல் இல்லை;
 அண்டைமொழி; ஆனாலும் உண்மை வெல்லும்
காரியத்தைச் சொல்லுவதில், பெரியீர்! என்றன்
 கணக்கறிவீர்! தமிழ்முதனூல் தன்னை, 'வேறு

பாரிதெனக்' காட்டுகின்ற பாதகத்தைப்
பரிந்துரைப்போர் எவரேனும் அவர்க்குச்சொல்வேன்!
சீரியனெம் மெய்கண்டான் ஞானத்திற்குச்
சிறுமையினை நினையாதீர்; புறம்செல் வீரே! (25)

சிற்றுரையும் பேருரையும் விரித்துக் கூறித்
தெளிவிக்கும் பெரும்பேறு பின்னோர் பெற்றார்.
வெற்றுரையே பலபெருக்கி, திராவிடத்து
வேதமிதைப் பொதுமக்கள் உணரக்காட்டிக்
கற்றுணரச் செய்யாமற் பேழை தன்னிற்
கனவயிரந் தனைக்காப்போர் போலக்காத்து
முற்றுணர்ந்தோர் பலர்மூடி வைத்த தாலே,
முழுதுமிங்கே அறிந்தோரும் சிலரே ஆனார். (26)

'சாப்பாட்டுச் சைவ'மிங்கே தேவை யில்லை!
சான்றாண்மைச் சைவமன்றோ தழைக்க வேண்டும்!
கூப்பாட்டுப் புரட்டினிலே சைவம் என்ற
கோயிலிங்கு நிமிராதாம்: ஆதலாலே,
நாப்பாட்டுப் பாடிடவும் நெஞ்சி னுள்ளே
நலமாரும் அன்புநெறி ஓங்கி நின்றே
பூப்பாட்டாம் என்றுணர்ந்தே மூவர் கூறும்
பொற்பாட்டை நற்பாட்டை ஓதீர் நன்றே! (27)

சீர்ப்பாட்டை மறவாமல், மெய்கண்டாரின்
திருப்பாட்டை உளங்கொண்டே, வையந்தன்னில்
நேர்ப்பாட்டை யிதென்ற உண்மை ஓர்ந்து
நெடும்பாட்டை பலஓடி வீண்போக்காமல்,
யார்ப்பாட்டைக் கேட்டாலும் செவிகொடாமல்
ஆர்ப்பாட்டஞ் செய்யாமல் அடங்கி நின்றே
வேர்ப்பாட்டை, வித்தாகும் பெரியபாட்டை
வியன்பாட்டைச் சிவஞானப் பாட்டைப்பாடீர்! (28)

சிவஞான போதத்தை உள்ளம் கொள்ளச்
செய்குவதே மெய்கண்டான் திருவடிக்குத்
தவஞானத் தமிழகத்தின் கைம்மாறாகும்;
தலைநலமாங் கலைநலமே செழித்த சான்றீர்!
நவஞான நுட்பத்தின் நன்மை எல்லாம்
நணுகுகின்ற ஓர்அளவைத் தமிழின் பேழை!
அவஞானம் தொலைத்துண்மை நெறியைக் காட்டும்
அகவிளக்குச் சுடர்நெறியில் நடப்போம் நாமே! (29)

# ஜோதிர் மகாலிங்கம்

**தவத்திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்**

இறைவன் அறிவுமயமாக அறிவே உருவாக உள்ளவன். அறிவு ஒளிவடிவாக இருப்பது. ஆகவே, நமது ஆன்றோர்களும், சான்றோர்களும் சோதியாய், சுடராய், சூழொளி விளக்காய் இறைவனைக்கண்டு அனுபவித்தனர்; நமக்கும் அறிவித்துள்ளனர். ஆண்டவன், ஆதியும் அந்தமுமில்லா அரும் பெரும் சோதியாய்த் தோன்றிய நிகழ்ச்சியைச் சிவ மகா புராணமும், ஏனைச் சிவபுராணங்களும் கூறுகின்றன.

திருமாலின் உந்தித் தாமரையில் தோன்றிய பிரமன், தன் தந்தையாகிய திருமாலைப்பார்த்துப் படைப்புக்கடவுளாகவுள்ள யானே பரம்பொருள் என்றார். பிரமனைத் தன் சக்தியிலே தோற்றுவித்து உலகமனைத்தையும் காக்கும் கடவுளான திருமால் தானே பரம்பொருள் என்றார். இருவரும் பொருளல்லவற்றைப் பொருளென்று உணரும் மருள் வயப்பட்டுள்ளமையை அறிந்த சிவ பரம்பொருள், ஆதி நடு அந்தமிலா அளவில் சோதிப் பிழம்பாய் இருவருக்கும் இடையே தோன்றி தாமே பரம்பொருள் என்பதை உணர்த்தினர் உணர்த்தியும், இருவரும் தெளிவடையாதவராய் அச்சோதியின் அடியையோ அல்லது முடியையோ காண்பவரே நம்முள் பெரியவர் எனத் தருக்கினர். திருமால் பன்றி வடிவெடுத்து அடியைக் காண்பேன் என பூமியை அகழ்ந்து சென்றார். பிரமனோ அன்னப் பறவை வடிவெடுத்து முடியைக் காண்பேனென விசும்பிற் பறந்து சென்றார். இருவரும் தேடிக்கொண்டே இருக்கின்றனர்; இன்னும் கண்டார்களில்லை. இதனை அப்பர் அடிகள்,

“ தேடிக் கண்டு கொண்டேன்
திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுளே
தேடிக் கண்டு கொண்டேன் ”

என்ற திருஅங்கமாலைத் திருப்பாட்டால் தெளிவிக்கின்றார்.

இங்ஙனம், சோதிப் பிழம்பாய்த் தோன்றிய இடமே திருவண்ணாமலை. அவ்வண்ணாமலை இன்னும் செம்மை நிறத்துடன் செம்மாந்திருப்பதே சிறந்தசான்று. இதே வரலாற்றை அடிப்படையாகக்கொண்டு விளங்குபவைதாம் துவாதச ஜோதிர்லிங்கத் தலங்கள்.

துவாதசம் ; துவம் - இரண்டு. தசம் - பத்து. எனவே பன்னிரண்டு தலங்கள் என்பது இதன் பொருளாம். சோமநாதம், மல்லிகார்ச்சுனம், உஜ்ஜைனி மகாகாளம், துங்காரம், வைத்தியநாதம், பீமசங்கரம், இராமேச்வரம், நாகேசம், விசுவேசம், திரியம்பகம், கேதாரம், கும்மேசம் என்பன பன்னிரு ஜோதிர்லிங்கத் தலங்களாகும்.

## 1. சோமநாதம் :

சௌராஷ்டிரம் எனப்படும் பம்பாய் நகரத்தை அடுத்த குஜராத் மாநிலத்தின், கத்தியவார் தீபகர்ப்பத்தின் தென்கரையில் அமைந்த பட்டினமாக விளங்குவது சோமநாதம். பன்னிரு ஜோதிர்லிங்கத் தலங்களுள் முதன்மையாக வைத்து எண்ணப்படும் சிறப்பு மிக்கது. வரலாற்றுச் சிறப்பு மிக்கது. மொகலாய மன்னர்களால் பதினான்கு முறை கொள்ளையிடப் பெற்றும், தற்காலத்தில் சர்தார் வல்லபாய் படேல் அவர்கள் முயற்சியால் கோடிக்கணக்கில் செலவு செய்து திருப்பணிகள் செய்யப்பெற்றுப் பொலிவுடன் திகழ்கிறது. இக்கோயில் கோட்டை வடிவில் அமைந்துள்ளது. இத்தலத்தை வழிபட்டோர் முற்பிறப்பை உணர்வர். பிரதான லிங்கம் பூமிக்கடியில் மறைவாக உள்ளது. இரண்யா முதலிய ஐந்து நதிகள் சோமநாதத்திற்கு அருகில் பாய்கின்றன. முத்தியளிக்கும் ஏழு தலங்களுள் முக்கியமானது.

சோமன் எனப்படும் சந்திரன் ரோகிணியிடம் மட்டும் அன்பு செலுத்தியதனால் தட்சனால் சாபம் பெற்றான். சாப நீக்கம் பெறுவதற்குப் பிரமதேவன்கட்டளைப்படி இத்தலத்தில் சிவபெருமானைக் குறித்துப் பத்துகோடிமுறை ‘மிருத்யுஞ்சய’ மந்திரத்தை செபித்தான் சோமன். சிவபரம்பொருள் வெளிப்பட்டுச் சந்திரனாகிய சோமனுக்கு வளரவும் தேயவும் அருள் வழங்கினார். சோமன் அருள்பெற்ற தலமாதலின் சோமநாதம்

எனப்பெற்றது. சோமவாரத்தில்வரும் அமாவாசை இரவும், சிவராத்திரியும் இத்தல வழிபாட்டிற்குச் சிறந்த காலமாகக் கருதப்படுகிறது.

## 2. மல்லிகார்ச்சுனம் :

அர்ச்சுனம் - மருதமரம். குப்த பரம்பரையில் வந்த இளவரசி சந்திராவதி என்பவர் மல்லிகை மலர் கொண்டு இங்குள்ள இறைவனைப் பூசித்தமையாலும், அர்ச்சுனவிருட்சம் (மருதமரம்) தல விருட்சமாக இருப்பதாலும் மல்லிகார்ச்சுனம் எனப் பெயர் பெற்றது இத்தலம். இது ஸ்ரீசைலம், மல்லிகார்ச்சுனம், (தேவாரத்துள்) திருப்பருப்பதம் எனவும் வழங்கப் படுகிறது. இது பாரதநாட்டின் நடுவிடமாகிய ஆந்திரமாநிலத்தின் பம்பாய் நகரத்திலிருந்து சில கல் தொலைவில் உள்ளது.

மருத மரத்தைத் தலவிருட்சமாகக் கொண்ட முத்தலங்களுள் இது வடக்கில் உள்ளது. தெற்கில் நெல்லை மாவட்டத்தில் புடார்ச்சுனமும் (திருப்புடைமருதூர்), தஞ்சை மாவட்டத்தில் இவ்விரண்டிற்கும் நடுவிலிருப்பதாய் மத்தியார்ச்சுனமும் (திரு இடை மருதூர்) உள்ளன. சோதிர்லிங்கத் தலங்களுள் மூவர் தேவாரமும் பெற்ற சிறப்புடைத்தலம் இது. ஞானசம்பந்தர் 'சுடுமணி உமிழ் நாகம்' எனத் தொடங்கும் பதிகத்தாலும், நாவரசர் 'கன்றினுர் புரங்கள் மூன்றும்' என்னும் பதிகத்தாலும், நாவலர்கோன் 'மானும் மரையினமும்' எனத் தொடங்கும் பதிகத்தாலும் போற்றி வழிபட்டுள்ளனர்.

நந்தி பர்வத (மலை) வடிவமாகி சிவபெருமானைத் தாங்குவதால் பருப்பதம் எனப் பெற்றது. உலகத்தை முதலில் சுற்றி வருபவருக்கே முதலில் திருமணம் என விநாயகருக்கும், முருகனுக்கும் பெருமானும் பிராட்டியும் ஒரு போட்டியமைத்தனர். விநாயகர் அம்மையப்பரை 'அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர்' என்ற கருத்தொடு இருவரையும் ஏழுமுறை வலம் வந்து போட்டியில் வெற்றிபெற்று சித்தி, புத்தி இருவரையும் திருமணம் புரிந்துகொண்டார். உலகம் முழுவதும் சுற்றி வந்த முருகன் விநாயகர் வெற்றியுற்றது கண்டு சினமுற்றவராய் கிரவுஞ்சகிரிக்குச் சென்று பிரமசாரியாய் வாழ்கிறுர். தாய் தந்தையர் தேடி வந்தனர்; வருவதையறிந்த முருகன் மேலும், அப்பாற் செல்ல, தேவர்களின்

வேண்டுகோட்படி மூன்று யோசனை தூரத்தில் தங்கினர். இவரைத் தேடிவந்த அம்மையப்பர் தங்கிய இடமே ஸ்ரீசைலம் என வழங்குகிறது. கயிலை மலைக்குச் சமமாக எண்ணப் படுகிறது. அமாவாசையில் சிவனும், பௌர்ணமியில் அம்மை யும் குமரனைச் சென்று கண்டு மகிழ்வதாகத் தல ஐதீகம். லிங்காயத்துக்களான வீரசைவர்கள் இத்தலத்தை பூகைலாசம் எனப் பெரிதும் போற்றுகின்றனர். இது கிருஷ்ண நதிக் கரையருகில் உள்ளது.

## 3. மகாகாளம் :

உஜ்ஜைனி ஏழு மோட்சத் தலங்களுள் ஒன்ருகிய அவந்திகா எனப்படுவது. மத்தியப் பிரதேசத்தில் அமைந் துள்ள சோதிர்லிங்கத் தலமாகும். இத்தலம் பண்டைக் காலத்தில் அமராவதி, அவந்திகா என வழங்கியது. மாளவ தேயத்தின் தலைநகர். விக்கிரமாதித்தனும். அவனுக்கு எதிரி யாகிய சாலிவாகனனும் தோன்றிய இடம். இவ்விருவர் பெயராலும் சகாப்தங்கள் தோன்றியுள்ளன என்பது குறிப் பிடத்தக்கது. காளிதாசன், தண்டி முதலிய புலவர்கள் வாழ்ந்த இடம். இரு காளிகோயில் இங்கே சிறப்புறத் திகழ் கின்றன. மகாகாளருடைய திருக்கோயில் சிப்ரா நதிக்கரை யில் அமைந்துள்ளது. பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை வரும் கும்பமேளா இங்குதான் நடக்கிறது.

அவந்தி தேசத்தில் வேதப்பிரியன் என்ற அந்தணரின் குமாரர்கள் நால்வரும், சிவபூசைச் சிறப்பாலும் நல்லொழுக்கத் தாலும் அந்நாட்டை வளமுடையதாக்கினர். அப்பொழுது, இரத்தினமாலா என்ற மலையிலிருந்து வந்த தூஷணன் என்ற அரக்கன் எங்குமே நன்மை நடக்க வொட்டாது தடுத்தனன். பல ஊர்களிலும் உள்ள அந்தணர்கள் ஒன்று கூடி வேதப் பிரியனின் குமரர்களோடு சேர்ந்து இவ்வரக்கனை அழிக்க வியலாது என்று கருதியவர்களாய் நாள்தோறும் பார்த்திவ பூசை செய்து வந்தனர். அவர்கள் நாள்தோறும் பூசை செய்வதற்கு மண் எடுத்த இடம் பெரிய குளமாக ஆயிற்று. அந்தணர்கள் யாவரும் பூசை புரிந்து தியானத்தில் இருக்கும் போது தூஷணன் என்னும் அரக்கன் அவர்களைத் துன்புறுத் தத் தொடங்கினன். அப்பொழுது அக்குளத்தினின்றும்

மகாகாளேஸ்வரர் தோன்றி அரக்கரை அழித்து அமரர்களைக் காத்தார். அவர்கள் வேண்டுகோட்படி சிப்ரா நதிக்கரையிலேயே இறைவன் எழுந்தருளினர்.

## 4. ஓங்காரம் :

நர்மதா நதியும் காவேரி எனப்படும் நதியும் சங்கமமாகி ஓடிவரும் அமைப்பு ஓங்கார வடிவமாக உள்ளதால் இத்தலம் ஓங்காரம் எனப்பெற்றது. மத்தியப் பிரதேசத்தில் நர்மதை நதிக்கரையில் அமைந்துள்ளது. நர்மதா நதியில் பல நிறமுள்ள சிவலிங்க பாணங்கள் கிடைக்கின்றன. கங்கையாற்றின் இடது கரைமட்டுமே புனிதமானது என்பர். ஆனல் நர்மதையின் இரு கரைகளுமே புனிதமானதாகக் கருதப்படுகிறது. இப்புண்ணிய நதி இத்தலத்தில் பிரணவ வடிவாக ஓடுவது சிறப்பாகும்.

விநாயகர் ஐந்து முகத்துடன் காட்சியளிக்கிருர். விந்திய மலே, மேருமலேபோல் சிறப்புறவேண்டி, நாரதர் சொற்படி சிவபூசை செய்யக்கருதி ஓங்கார ருபமாய் ஒரு எந்திரம் அமைத்துப் பார்த்திபலிங்கபூசை ஆறுமாத காலமியற்றி வரம் பெற்றது. இதுவே ஓங்காரேச்சுவரம் ஆயிற்று என்பர்.

## 5. வைத்தியநாதம் :

இத்தலம் ஆந்திர மாநிலத்தில் (ஹைதராபாத்) முற்காலத்தில் இருந்தது. தற்போது மகாராஷ்டர மாநிலத்தில் விளங்குகிறது. மாபெரும் தூண்களுடன் மரவேலேப்பாடுமிக்கதாகச் சிறந்து விளங்குவது இக்கோயில். தென்னுட்டில், தஞ்சை மாவட்டத்தில் உள்ள வைத்தியநாதர் ஆலயத்தைப் போலவே முடி இறக்குதல், மாவிளக்குப் போடுதல் போன்ற பிரார்த்தனேகளே மக்கள் நிகழ்த்துகின்றனர்.

சாமகானம் இசைத்து சிவனருள் பெற்ற இராவணன், அவரிடமிருந்து ஆத்மலிங்கத்தைப் பெற்று இலங்கைக்கு எடுத்துச் செல்ல முற்பட்டான். இயலாமையினல் சிவபெருமானிடம் முறையிட, அதனே அவர் இருபிளப்பாக்கிக் காவடியில் வைத்துச் செல்ல அருளினர். அவ்வாறு தூக்கிச் சென்ற இராவணன் இத்தலத்திற்கு வந்தவுடன், சிறுநீர் கழிக்க

வேண்டியிருந்ததால், அருகில் நின்ற சிறுவனிடம் காவடியைக் கொடுக்க சிறுவனாக வந்த விநாயகர் காவடியைக் கீழே வைத்து மறைந்தார். முற்பகுதிப் பிளப்பு கோகரணத் தலமாகவும், பிற்பகுதிப் பிளப்பு இத்தலமாகவும் விளங்கலாயிற்று.

## 6. பீமசங்கரம் :

இத்தலம் மகாராஷ்டிர மாநிலத்தில் பம்பாயில் இருந்து 60 கல் தொலைவில் உள்ளது. காட்டின் நடுவிடத்தில் உள்ளது. ஆலயம் தற்போது சிறிது சிதைந்துள்ள நிலையில் காணப்படுகிறது. ஆலயம் சிறியது. பீமா நதி இவ்வாலயத்தின் அருகில் உற்பத்தியாகிறது. இங்கே இலிங்கமூர்த்தி ஒரு முழ உயரத்தில் காட்சி தருகிறார்.

கும்பகர்ணனுக்கும் கற்குடி என்ற அரக்கிக்கும் பிறந்த பீமன் என்ற அசுரன் பிரியதர்மன் என்ற அரசனின் சிவபூசையைத் தடுத்து அவனைக் கொல்ல முயன்றபோது இறைவன் அவ்வரசன் பூசித்த மண்ணாகிய சிவலிங்கத்திலிருந்து வெளிப்பட்டு, பீமனைச் சங்கரித்து தேவர் வேண்டுகோட்கிணங்க சாந்தமூர்த்தியாக பிமசங்கரர் என்ற பெயரில் விளங்குகிறார். பீமனைச் சங்கரித்ததால் பீமசங்கரம் என்ற பெயர் பெற்றது இத்தலம்.

## 7. இராமேசுவரம் :

தமிழ் நாட்டின் தென்பகுதியில் வங்கக் கடலில் அமைந்த ஒரு சிறு தீவாக உள்ளது இத்தலம். கடல்நீராட்டு இத்தலத்தில் சிறப்பு மிக்கது. ஆலயத்துள் பதினான்கு தீர்த்தங்களுக்குமேல் உள்ளன. எல்லாவற்றிலும் கோடி தீர்த்தம் மிக்க சிறப்பு வாய்ந்தது. காசியாத்திரை செய்தவர்கள் இராமேசுவர யாத்திரை செய்தால்தான் யாத்திரை நிறைவு பெற்றுப் பயனடைகின்றனர் என்பது ஐதீகம். தமிழ் நாட்டிலுள்ள ஜோதிர்லிங்கத் தலம் இது ஒன்றே என்பது குறிப்பிடத்தக்கது. ஞானசம்பந்தரும், நாவரசரும் பாடியுள்ள நன்மை மிக்க தலம். ஆலயம் மிகப் பெரியது. உலகிலேயே மிகப் பெரிய பிராகாரத்தை உடையது.

இராவணனைக் கொன்ற பழி நீங்குவதற்குக் கழுவாயாக இராமன் மணலால் சிவலிங்கம் அமைத்து வழிபட்ட சிறப்புடைமையின் ராமேச்சுவரம் எனப்பெயர் பெற்றது. இராவணனை அழிப்பதற்கு முன்பு அவனை அழிப்பதற்காகவே இங்குள்ள இறைவனை இராமன் வழிபட்டு அருள்பெற்றார் என்பதும் மற்றொரு வரலாறாகும்.

## 8. நாகேசம் :

மகாராட்டிர மாநிலத்தில் கோண்டி ரயில் நிலையத்திலிருந்து 14 கல் தொலைவிலுள்ளது நாகேசமென்னும் இத்தலம்.

சிவலிங்கத்தின் கோமுகம் கிழக்கு முகமாக இத்தலத்தில் திரும்பியுள்ளது. நாமதேவ சுவாமிகளின் பெருமையை வெளிப்படுத்துவதற்காக இறைவன் இவ்வாறு திரும்பியுள்ளார் என்பது ஐதீகம். சிவலிங்கம் ஒரு மலைக்குகைக்குள் இடம் பெற்றுள்ளது.

மோகினி வடிவங்கொண்ட திருமாலும், பிட்சாடனர் வடிவங் கொண்ட சிவபெருமானும் தாருகாவனம் சென்ற வரலாறு இத்தலத்தொடு தொடர்பு படுத்திப் பேசப்படுகிறது. அயோத்திக் கருகிலுள்ள சரயு நதிக்கரையில் நாகேசுவரர் என்ற பெயரோடு ஒரு சிவலிங்கமுண்டு. இதனையே நாகேசம் எனச் சிலர் கூறுவர். ஆனால் வரலாற்றுப்படி ஔண்டாவிலுள்ள சிவலிங்கமே ஜோதிர்லிங்கம் என உறுதிப் படுத்தப் பட்டுள்ளது.

## 9. விசுவேசம் :

வருணை அசி என்ற இரு நதிகளின் சங்கமத்திற்கு இடையில் உள்ளதால் இத்தலம் வாரணாசி எனப்பட்டது. கர்மங்களைப் போக்குவதாலும், சிவஞானத்தால் உயிர்கள் ஒளிபெறுவதாலும் காசி எனவும் பெயர் பெற்றது. இது உத்தரப் பிரதேசத்தில் அமைந்துள்ளது. முத்தி தரும் தலங்களில் இதுவும் ஒன்று. கங்கை இத்தலத்தில் உத்திரவாகினியாகச் (வடக்கு நோக்கி) செல்கிறது. இவ்வாறு செல்வது சிறப்புடையதாகும். கங்கையின் மேற்குக் கரையில் அமைந்

துள்ளது இப்புனிதத்தலம். கங்கைக் கரையில் விசுவநாதர் ஆலயமும், கேதாரநாதர் ஆலயமும் சிறப்புடையவை. வருணை, அசி என்ற இரு நதிக்கும் இடையில் 64 தீர்த்தக் கட்டங்கள் அமைந்துள்ளன. அவற்றுள் மணி கர்ணிகா கட்டம் மிகச் சிறந்துள்ளது.

அன்னபூரணி, விசாலாட்சி, காலபைரவர், துண்டிராஜ கணபதி முதலிய மூர்த்திகட்குத் தனித்தனிக் கோயில்கள் உள்ளன. இத்தலத்தில் இறப்பவர்கள் முத்தி பெறுவர் என்பது ஐதீகம்.

## 10. திரியம்பகம் :

மகாராஷ்டிர மாநிலத்தில் நாசிக்கிலிருந்து தென்கிழக்கில் உள்ளது இத்தலம். பிரமகிரி என்ற மலையைச் சார்ந்துள்ளது. இம்மலையில் கோதாவரி அகல்யா, வைதர்ண, மேற்கு நோக்கிச் செல்லும் கங்கை ஆகியவை உற்பத்தியாகின்றன. அங்குள்ள காட்டில் மூன்று லிங்கங்கள் மூன்று கண்போ லுள்ளன. இதனல் திரியம்பகம் எனப் பெயர் வந்ததென்பர்.

பிரமன் சிவபெருமானின் திருமுடியைக் கண்டதாகப் பொய் உரைத்ததால் அவனை மலையாகுமாறு சபித்தார். பிரமனின் தவத்திற்கிரங்கி பேதபாவனையின்றி பிரமகிரியில் இருப்பதாக அருள் பாவித்தார். இது காரணமாகவே இம் மலைக்கு பிரமகிரி எனப் பெயர் வந்ததென்பர். அஷ்ட பைரவர் முதலிய திருவுருவங்கள் உள்ளன. மாக்கல்லாலான லிங்கத் திற்குரிய பீடம் மட்டுமேயுள்ளது. பீடத்தின் நடுவில் ஒரு சிறு செம்பு கொள்ளக்கூடியதாகிய ஒரு குழியுண்டு. இதனுள் மூன்று சிவலிங்க வடிவங்கள் இருக்கின்றன. இக்குழியி லிருந்து கங்கை வெளிப்படுகிறது.

## 11. கேதாரம் .

உத்தரப்பிரதேசத்தில் இமய மலையில் உள்ளது திருக் கேதாரம். தெற்கு நோக்கிய சந்நிதி. திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய இருவராலும பாடப்பெற்ற சிறப்புடையது. ஹரித்துவாரம் வழியாக ருத்திரப் பிரயாகைவரை சென்று, அங்கிருந்து முப்பது கல் தொலைவு நடந்து செல்லவேண்டும்.

குப்த காசி வரை பேருந்துகளில் செல்லலாம். கேதாரம் செல்லும் வழியில் இந்திர நீல பருப்பதம், அனேகதங்காவதம் ஆகிய பாடல்பெற்ற தலங்களையும் தரிசிக்கலாம். 'கேதார' என்னும் சொல் சிவபெருமான் கங்காதேவியை முடியில் வைத்திருக்கிறன் என்பதை உணர்த்தும். கேதாரநாதர் ஆலயம் கடல் மட்டத்திலிருந்து 11,750 அடி உயரத்தில் உள்ளது. இங்குள்ள விஷ்ணுவைத் தரிசித்தால் பத்ரியி லுள்ள நாராயணனைத் தரிசித்த பலன் உண்டு. திருமால் நர நாராயண வடிவத்தில் இருந்து பார்த்திப லிங்கத்தில் சிவபெருமானைப் பூசித்து 'கேதார மலையில்' தேவரீர்! எழுந் தருளியிருக்க வேண்டும்' என்ற பிரார்த்தனைக்கு இணங்க சுவாமி இங்கு எழுந்தருளியுள்ளார் என்பது ஐதீகம். இறை வர் ஏப்ரல் செப்டம்பர் முடிய மனிதர்களால் பூசிக்கப்படுகிறர். அக்டோபர் முதல் மார்ச் முடிய பனியால் மூடப்பட்ட நிலையில் இறைவனுக்குத் தேவ பூஜை நிகழ்கிறது.

## 12. குஸ்மேசம் :

ஆந்திர மாநிலத்தில் ஔரங்காபாத்தில் இறங்கி இத் தலத்திற்குச் செல்லவேண்டும். சுதர்மன் என்ற அந்தணன் மனைவியான குஸ்மையின்பெயரால் இறைவன் குஸ்மேஸ்வரன் எனப் பெயர் பெற்றுன். இங்குள்ள சிவலிங்கம் செந்நிறம் உள்ளதாகக் காட்சியளிக்கிறது. அம்பிகை குங்குமப்பூவால் வழிபட்ட சிறப்புடையது. சுதர்மனின் இரண்டாவது மனைவி யான குஸ்மையின் புத்திரன் கொலை செய்யப்பட்டபோது அவள் பூசைக்கிரங்கி இறைவன் அவளுக்கு மகனை எழுப்பி யருளிய சிறப்புடையது.

இப்பன்னிரு சோதிர்லிங்கத் தலங்களில் உள்ள புண்ணிய தீர்த்தங்களில் நீராடுதல் சகல பாவங்களையும் போக்கி மனத் திற்கு அமைதியை அளித்து வீட்டுலகையும் நல்கும். இங்கு உள்ள இலிங்கங்களின் பெயர்களை நாடோறும் காலையில் நினைத்த மாத்திரத்தே பாபம் அகன்று நினைத்த செயல் நிறை வேறும் என்பது ஆன்றோர் துணிபு.

இப்பன்னிரு தலங்களுள் வைத்தியநாதம், மல்லிகார்ச்சு னம், ஸ்ரீசைலம், நாகேசம் என்ற நான்கு தலங்கட்கும் மாற் றுத் தலங்களாகத் தமிழகத்தில் வைத்தீஸ்வரன்கோயில்,

திருஇடைமருதூர், சிவசைலம், திருநாகேச்சுரம் என்ற தலங்கள் சிறப்புடன் திகழ்கின்றன. இவற்றுள்ளும் திருஇடைமருதூரில் (மத்யார்ச்சுனத்தில்) எழுந்தருளியுள்ள இலிங்க மூர்த்தியைத்தான் மகாலிங்கம் என்ற பெயரால் அழைக்கிறோம். மற்ற எல்லாத் தலங்களிலும் உள்ள இலிங்க மூர்த்திகளை இப்பெயரால் அழைப்பது வழக்கத்தில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. சோதிர்லிங்கத் தலங்களில் உள்ள இலிங்கங்கட்குக்கூட மகாலிங்கம் என்ற பெயர் அமைத்து அழைக்கப்படவில்லை. இடைமருதில் உள்ள இலிங்க மூர்த்தியை மகாலிங்கம் என்று அழைப்பதோடு 'ஜோதிர் மகாலிங்கம்' என்றும் போற்றி வழிபடுகிறார்கள் பக்தர்கள். அம்மகாலிங்கப் பெருமானுக்கு மகாகும்பாபிஷேகம் நடைபெற்ற இக்காலத்தே அம்மகாலிங்கத்தை வழிபட்டுப் பயனடைவோமாக !

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam Sirkazhi

"I have gone round the temple with the Supdt. and worshipped the deities. It has given me lot af mental solace. The 'archanas' were done in an orthdox way to the accompaniment of music The songs were rendered very well by the Oduvamurthi with great fervour. The temple precincts are maintained excellently and it speaks volumes for the personal interest taken by the Supdt I am looking forward to another opportunity of visiting the temple."

Sd. Ch. Ramakrishna Rao,

18-7-70

Law Secretary,
Govt. of Pondy.

# ஐவாய் வழிசெல்லும் அவா

ஸ்ரீ ராமகதாரத்னம்,

**திரு. V. தியாகராஜன்**

அழகிய பாத்திரம் வாங்கினல் அதில் தேனே பாலோ வைத்துப் பருகவேண்டும். அதில் குப்பையை நிரப்பிவைக்க லாமா? இறைவனளித்த உடலில் உள்ள புலன்களை நன் னெறியில் செயல்படுத்த வேண்டுமென்று பெரியோர் அறி வுறுத்துவர். அருட்பிரகாச வள்ளலார் தனது புலன்களை நோக்கி "கண்களே! விபூதி தரியாதவரைக் காணுதீர்கள். விபூதி தரியாதவர் ஏதாவது பேசினுல்கூட, ஏ! காதுகளே! அடைத்துக் கொள்ளுங்கள்! நாவே! திருநீறிடாதவர் உணவு கொடுத்தால் உண்ணுதே! ஏ! உடலே! திருநீறி டாதவர் தீண்டினுல்கூட முள் தைத்தமாதிரி நடுங்கு! கரங் களே! சிவனடியார் எது கேட்பினும் கொடுத்து விடுங்கள்" என்கின்ருர். மூக்கு இறைவனது நாமத்தை, மெல்லின எழுத்துக்களுடைய நாமத்தைக் கூறுவதற்குப் புண்ணியம் செய்துள்ளது. பிஞ்ஞகன் என்பது அப்படிப்பட்ட திருநாமம். அதைக்கூறும் பேறு கிடைக்காத மூக்கை,

"புல்லங் கணநீர்ப்புழை யென்கோ! புற்றென்கோ!
சொல்லும் பசுமாட்டுத் துளையென்கோ – கொல்லுஞ்சீர்
வீயாத பிஞ்ஞகப்பேர் மெல்லினத்தின் நல்லிசைதான்
தோயாத நா சித்துளை"

என்பர் ஸ்ரீ ராமலிங்க சுவாமிகள். இறைவனை வழிபட அமர்ந் தால், ஐம்புலன்களும் த[illegible]க்கின்றன. 'உன்னை நினைக்கவே விடமாட்டேனென்கின்றன. உனக்கு மலரிட்டு வழிபடவே இடையூறு செய்கின்றன இந்த ஐம்புலன்களும்:

"ஓரவொட்டார் ஒன்றை உன்ன வொட்டார் மலரிட்டுனதாள்
சேரவொட்டார் ஐவர்"

என்கின்றார் அருணகிரிநாதர். 'கையானது மலரிட்டு வழி படும்போது, கண் எங்கேயோ பார்க்கின்றது. மனம் வேறு ஏதோ எண்ணங்கொண்டு அலைகின்றது. வாய் என்னவோ பேசிக்கொண்டே பூஜையிலிருப்பதாகப் பொய் பேசுகிறது. வழிபாடு செய்யும்போதே உடம்பு நல்ல காற்று முதலிய சுகபோகங்களை விரும்புகிறது. செவியோ வேறு என்னவோ ஒரு விஷயத்தைக் கேட்டுக்கொண்டிருக்கின்றது. இவ்வாறு ஒருமைப்பாடில்லாமல் நான் செய்யும் பூஜையை எவ்வாறு ஏற்றுக்கொள்ளுவாய்! இறைவனே'

கையொன்று செய்ய ; விழியொன்று நாடக் கருத்தொன்று எண்ண
பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால் கமழும்
மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்பும்யான்
செய்கின்ற பூசை எவ்வாறு கொள்வாய் வினைதீர்த்தவனே.

என்கிறார் பட்டினத்தார். இறைவன் அளித்த உடல் அவனுக்கே உபயோகப்படவேணுமென்று வேண்டுவார் மகா வித்துவான் ஸ்ரீ பிள்ளை அவர்கள்.

ஒப்பில் நின்புகழே கேட்க என்செவிகள்!
ஓங்கு நின்னுருவமே காணத்
தப்பி நின்றனையே பாடிட வாய்!
கைதவாது நின் அடிப்பணியாற்ற
இப்படியுறுமேல் செங்கதிருதயம்
எத்திசையெழினும் மற்றென்னே !
கப்பிணர் தருக்கள் சூழ் திருவானைக்கா
வகிலாண்ட நாயகியே !

—ஸ்ரீ பிள்ளையவர்கள்.

இவ்வாறு இறைவனுக்கே அர்ப்பணம் செய்யப்படவேண்டிய உடல் ஆசைவசப்படுகின்றது. ஆசையே துன்பத்திற்கெல்லாம் காரணம்; அதனாலேயே நம் முன்னோர்கள் "கடவுளிடம்கூட ஆசையை வைக்காதே. கடவுள் வணக்கத்தை எந்தவிதமான பதிலுதவியும் வேண்டாத கடமையாகக்கொள். ஆசைப்பட்டது கிடைக்கவில்லையென்றால் ஏமாற்றம் காரணமாகத் துன்பமேற்படுகின்றது. ஆசையை விட்டவர்க்குத் தானாகவே கிடைக்கும் நன்மைகள் களிப்பூட்டும்' என்பர்.

ஆசையறுமின்கள்! ஆசையறுமின்கள்!
ஈசனொடாயினும் ஆசையறுமின்கள்!
ஆசைப்படப்பட ஆய்வருந்துன்பங்கள்
ஆசைவிடவிட ஆனந்தமாமே" — திருமூலர்.

"வேண்டத்தக்கதறிவோய் நீ! வேண்டும் பொருள்கள் தருவோய் நீ!" என்றபடி இறைவனுக்கு நமது தேவைகள் தெரியும். குழந்தைக்கு என்ன தேவையென்பதைத் தாய் அறிவாளல்லவா? நாம் ஏதாவது ஆசைப்பட்டு இறைவனை யணுகினல், அஃதை அவனளித்துவிடுகிருன். அதனுலாகும் இன்பத்தை நுகருவதற்கு மீண்டும் பிறப்பெடுக்கவேண்டி வருகிறது. ஆதலால் ஆசை பிறப்பையளித்துவிடும் என்பது குறிப்பு. ஆசைக்காற்று அடித்தால் நாம் பஞ்சாகப் பறந்து விடுவோம். நமது கல்வி கேள்விகள் வீணுகி, முத்தி மார்க்கத்திலுள்ள எண்ணம் நீங்கி ஐம்புலன் வழிசென்று அழிவர். ஆசையற்ற தன்மையைப்போல் தெய்வமே கிடையாது என்பர் தாயுமானவர்.

ஆசையெனும் பெருங்காற்றூடு இலவம் பஞ்சென மனது
அலையும் காலம்
மோசம் வரும்; இதனுலே கற்றதும் கேட்டதும் தூர்ந்து
முத்திக்கான
நேசமுதல் வாசமும் போய் புலனுயிற் கொடுமைபற்றி
நிற்பரந்தோ!
தேசு பழுத்தருள் பழுத்த பராபரமே!
நிராசையின்றேற் றெய்வமுண்டோ!

ஆசை காரணமாக ஐம்புலன்களை அலையவிட்டு, அழிந்து போகும் உடலை நிலையற்றதென அறிந்தும் மனம்போன போக்கெல்லாம் போய், பெண்ணாசை கொண்டு அலைந்து, நல்ல உணவு வேண்டுமென ஆசைகொண்டும், நல்லாடை, நல்ல வாசத்தலம், கண்ணுக்கு இன்பமான காட்சி வேணுமென்று ஆசைப்படுகிறேனே. உனை நினைக்க எனக்கு உபாயம் இல்லையே என உருகுகிருர் அருட்பிரகாசவள்ளலார்.

வருகணத்து வாழ்ந்திடுமோ விழுமோ இந்த
மலக்கூடு என்று அறிஞரெலாம் வருந்தக் கேட்டும்
அருகணைத்துக் கொளப் பெண்பேயெங்கே! மேட்டுக்
கடைத்திட வெண்சோறு எங்கே! ஆடைஎங்கே!

இருகணுக்கு வியப்பெங்கே! வசதியான
இடமெங்கே! என்று திரிந்து இளைத்தேனல்லால்
ஒருகணத்து உனை நினைந்ததுண்டோ? என்னை
உடையானே! எவ்வகை நான் உய்யுமாறே.

இதனாலேயே ஆசையற்றுப் பாசம் விட்டுச் சிவபூசை செய்ய வேணும் என்பர் சிவபோகசாரத்தில்,

ஆசையறாய் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணாய்!
நேசமுடன் ஐந்தெழுத்தை நீநினையாய் — சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்?

இவ்வாறு மெய், வாய், விழி, நாசி, செவியாகிய ஐந்து புலன்களால் ஏற்படும் ஆசையை விட்டால் முருகனுடைய திரு அருள் பெறலாம்! அவனது ஒளிமிகுந்த வேலையும் அவன் திருக்காலையும் பெற்று உய்ந்து உயர்ந்து வாழ்வாய் என மனத்திற்குப் போதிக்கும் இவ்வளவு கருத்துக்களையும் ஒரே பாடலில் பாடியருளினார் அருணகிரிநாதர்!

கைவாய் கதிர்வேல் முருகன் கழல் பெற்று
உய்வாய் மனனே! ஒழிவாய்! ஒழிவாய்!
மெய்வாய் விழி நாசியொடும் செவியாம்
ஐவாய் வழிசெல்லும் அவாவினையே! [ க-அ-14 ]

ஆசையொழித்து ஆனந்த வாழ்வு வாழ ஆறுமுகப் பெருமான் அருளை வேண்டுவோமாக!

---

“ ஞானசம்பந்தம் ”

“ ஞானசம்பந்தம் ” திங்களிதழ் 28 ஆண்டுகளாகச் சைவமும் தமிழும் பரப்பிவருவது உலகம் அறிந்தது. இது திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திலிருந்து வெளிவருவது சமயப் பொருள், இலக்கணம், இலக்கியம் முதலியவற்றுடன் தெளிவான கட்டுரைகளை வெளியிட்டுவருவது சந்தாதாரர்கள் சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி ‘ஞானசம்பந்தம்’ பெற்றுப் பயன் பெறுவார்களாக

ஆண்டுச் சந்தா :- உள்நாடு ரூ. 3—00 வெளிநாடு ரூ. 4—00

செயலாளர் : “ ஞானசம்பந்தம் ” காரியாலயம், தருமையாதீனம், மாயூரம் அஞ்சல், தஞ்சை மாவட்டம்.

# " கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான் "

**வித்துவான். திருமதி. ப. நீலா**

( மலர் 29, இதழ் 8, பக்கம் 425 இன் தொடர்ச்சி )

வேதமே தனது வடிவென்று விண்ணின்றிழிந்த, விமான மறைக்கீதன் உலவாக்கிழி தந்து உறுதிப்படுத்திய ஒண்மை கண்டோம். இனிமேல் அப் போதங்கடந்தபொருள் நான்மாடக் கூடலின் வீதிகளில் பாதம்படிய நடந்து வளையல்விற்ற விநோதங் காண்போம். தென்னவன் குலபூடணன் வேதமுணர்ந்தும், வேதமுணர்ந்தோரைத் தழுவியும் செங்கோலோச்சும் நாளில் இவ்விளையாடல் நிகழ்கின்றது.

**இது பழங்கதை :**

தாருகாவனத்து முனிவர்களின் மனைவியர்கள் கற்பில் தமக்கு மிக்கார் இல்லையென்னும் செருக்குற்றவர்கள். அவர்களுடைய கற்புநிலையைச் சோதித்தளந்து காட்ட மன்மதனை நீருக்கிய மாதேவன் காபாலியாகிப் பிச்சைக்கு வருகின்றான். வேதமசைக்குங் கோவணமும், மெய்யில் திருநீறும், உள்ளாள கீதமென்ற கானமிசைக்குங் கனிவாயும், கிண்கிணியணிந்த பாதமலரும், பலிகொள் பாத்திரமுமாக இரதியின் கணவன் தவவேடங் கொண்டு வருவதுபோல வருகிறார் தையலொரு பாகர். கீதம் செவிப்படுமுன் பள்ளங் கண்டிழிபுனல்போல் பாவையர்கள் பலிகொண்டு வருகிறார்கள்.

**நிறை கவர்ந்த நிலா முடியன் :**

ஐயமிடவந்த தையலர்கள் வளைசோர, வாள்விழி நீர்சோர, மேகலை நழுவ, மேலாடை நெகிழ நாணமுந் நிறையுமிழந்து நின்றார்கள். பெருமானுடைய அழகில் மயங்கி அவனைக் கூட அவாவினர். காமனை முனிந்த கண்ணுதல் இவர்கள் கருத்துட் படுவானா ?

வளையல்களைப் பிச்சையோடு சேர்த்துப்போட்ட கோதையர் பெம்மானிடம் எங்கள் வளையலைத் தாரும் என இறைஞ்சினர். அவனோ அது நும் கழுத்திலன்றோ உள்ளது. (வளை - சங்கு) என்று மறுமொழி தந்தான். முக்கண்ணனுக்கும் முனி பத்தினியர்களுக்கும் இப்படி இருபொருள் படும்படியான அருமையான உரையாடல் நிகழ்ந்தது. அவர்கள் கேட்ட கேள்வியையே விடையாக்கி வேடிக்கை காட்டுகிறான் விமலன்•

மடந்தையர்: எம் கலையினைத் தாரும் சுவாமி (கலை: ஆடை)

இறை: கலை நிலவென்ற நும் முகத்திலுள்ளதே.

இளையர்: இடையறிந்து எம்மைச் சேர வருதிர் ஐயா (இடை: சமயம்)

இறை: நுமக்கு இடையென்ப தினிக் காணாது. (இடை: இடுப்பு)

மாதர்: எம் பண்டைய வண்ணந் தந்து இல்லம் செல்ல விடையளித்திடும்.

இறை: எந்தன் விடை வேலையிடைத் துயிலுமே (விடை: ரிஷபமென்ற திருமால். வேலை: கடல்)

நங்கையர்: இக் கபாலிக்கு நடுவு இல்லைதான் போலும் (நடுவு: ஒருபால் கோடாமை)

இறை: நடுவிலாமை எமக்கல்ல. உங்களுக்கே பொருந்தும் (நடுவு: இடை)

வனிதையர்: பார்த்தீர்களா அடிகளின் நெஞ்சம் வலிய கல்போன்றுள்ளது.

இறை: நுங் கொங்கையே வன்கல்லாகும்.

சுடரிழையர்: கங்கையை நீர் சுமந்தது எதற்கு ஐயா? (கங்கை: நதி)

இறை: நும்மிடம் பலிகொள்ளத்தான். (கம் + கை: பிரமனின் தலையோடு)

பூவையர்: ஐயனிசைத்த செப்பைக் கண்டீரோ! அது எதுபோலுள்ளது! (செப்பு: பதில்)

இறை: நும் தனம் போலிருக்கிறது.

காரிகையர்: பெருமானே நும் கந்தரம் கறுத்ததேனோ? (கந்தரம் : கழுத்து)

இறை: கந்தரம் கறுத்தது மழை பொழியத்தான் - வேறெதற்கு (கந்தரம் : மேகம்).

மின்னிடையார்: உம் உத்தரம் யாது! விளங்கச் சொல்லும் (உத்தரம் : பதில்)

இறை: தெற்கே நின்றால் தெரியத் தோன்றுமே அது. (உத்திரம் : வடக்கு)

இவ்வாறு வம்புசெய்த அம்பன்ன கண்ணார் இறைவனை நெருங்கிவந்து அவர்விழியுள் தம்முருவைக் காண்கின்றனர். பின்பு கொஞ்சும் குயிலெனக் குழறிக் கொடியனையார் பலர் நும் கண்ணுள்ளாரே! எம்மையும் கைக்கொண்டு அருளுக என வேண்டினர். செஞ்சடைப் பிரானும் அவ்வஞ்சியரை நெருங்கி அவர் விழியில் தம்முருக் கண்டு நம்மினும் மிக்காராகிய ஒருவர் நும்விழியிடை உள்ளார். அவரை விழித்துக் கண்டுகொள்க என்று கூறி அகன்றார். அஞ்சலிப்பாரும், அடியில் தாழ்வாரும், வளைக்கை கொண்டு தழுவ வருவாருமென மயங்கி மாதர் வாடினர். பின்பு எம் கைவிட்டுக் கழன்ற வளையல்களையாவது மீள இடுங்கள் என்று வேண்ட நாளை வந்திடுவோம் எனக்கூறி நம்பன் மறைந்தான்.

## சாபம் பெற்ற பாவையர்:

பிள்ளை வெண் திங்கள் வேய்ந்த பிரான் கொண்டுபோன நாணமும் உள்ளமும் மீட்க வகையறியாது வாடிய பத்தினியர்களை முனிவர்கள் கண்டனர். பசலைபூத்து கலையும் கற்பும் இழந்து ஐங்கணையான் அம்புக்கிடனென ஆவமென (அம்பு அருத் தூணி) நிற்கும் அழகிகளைக் கண்ட கணவர்கள் தம் தவவலியால் கூடல்நாயகனே இவ்வாடலைப் புரிந்தான் என்றுணர்ந்தனர். கற்புநிலை திரிந்த நீவிர் யாவரும் கூடல் நகரின் வணிகக் குலக் கன்னியராய்த் தோன்றுவீர் என்று சாபந்தர அவர்கள் எங்களுக்கு விடுதலை எப்போது என்று கேட்க முனிவர்களும் மதுரைக்கரசன் சோமசுந்தரப்பெருமான் வந்து உங்கள் கைதீண்ட சாபம் நீங்கும் என்றருளினர்.

**வளையல் விற்ற வடிவழகன் :-**

அப் பழங்கதைப்படித் தாம் கவர்ந்த வளையல்களையே இப்பொழுது விற்க வருகிறார் இறைவன். அப்பெண்களும் தம் சாபவிதிப்படியே வணிகர் குலத்தில் பிறந்துள்ளார். இப்பொழுது அவர்கள் பேதையிளம் பருவங்கடந்து காதலரும்பும் கன்னிகளாக விளங்குகிறார்கள்.

எண்தோளுடைய எழிலன் கங்கை கரந்து கண்டங் கரந்து, இடப்பாலுள்ள மங்கை வடிவத்தையும் மறைத்து வளையல் சுமந்து கூவி வருகின்றான்.

வளையலோசையும் அதைச் சொல்லும் வணிகரோசையும் கேட்டு மாளிகையை விட்டு வாயிலுக்கு வந்தன மயில்கள், எங்கள் செங்கைகளுக் கேற்ற வளையல்களை இடுமின் என்று மங்கையர்கள் வணிகரிடம் கை காட்ட அகத்தெழு காதலைக் கண்காட்டின. மடவார் செங்கைபற்றிய புங்கவன் வளையல் களைக் கைகளிலும் மையலை மனத்திலுமாக ஏற்றினான்.

அடுக்கிய வளைகளையெல்லாம் உடைத்து விட்டு மீளவும் வந்து அழகனிடம் கைநீட்டினர் மைதீட்டினர். மலர்க்கணை கள் பட்டு மேனியிளைக்க அடுக்கிய வளை சரிந்தது. பின்னும் சிறிய வளைகளை அணிவியுங்கள் என்று சிலர் வந்தனர்.

**காதல் கொண்டார் கருக்கொண்டார் :-**

தாங்களிடும் வளைகளுடன் எம் மேகலைகளும் சரிகின்றனவே யென்று மைவாள் விழியில் மையல் காட்டிய மாதர்களை ஐயன் கையால் தீண்டிய காரணத்தால் அவர்கள் கருப்ப முற்றனர்.

வளையலுக்குரிய பொருளைப் பெற்றுக்கொள்ளுங்கள் என அப்பெண்கள் அழைக்க பெருமான் நாளை வருவோம் என நவின்றகன்றான். வணிகப் பெண்களுடன் மற்றையோருங் காண சிவலிங்கத் திருவுருவுள் தன்னுருக் கரந்தான்.

வேலெடுத்த வீரனும் முருகனையொத்த இளஞ்சிறார்களை அப்பூவையர் பெற்றனர். அவர்களை வீரக்காளையர்களாக வளர்த்துப் பின்னை பேரின்பப்பேறுற்றனர், அம்பலத்தாடும் ஐயன் இணையடிகளில் ஒன்றிய போகம் பெற்றனர் வணிகக் கன்னியர்.

( வளரும் )



சத்தியாய்ச் சிவமாம் தனிமுழு முதல்அருள்
சித்தி விநாயகன் திருவடி போற்றி.



திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்கு வருகை புரிந்த
மைசூர் மகாராசா மாண்புமிகு ஜெயசாமராஜ வாடியார் அவர்களுக்கு
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
பொன்னாடை போர்த்து மகர கண்டிகை அளித்தருளல்